[Tamil]

ஒக்ரோபர் 2018

பாலர் வகுப்பு (Kindergarten) முதல் மூன்றாம் வகுப்பு வரையான மாணவர்களின் அன்பான பெற்றோரே/பாதுகாவலரே,

மாணவர்கள் *அனைவரும்* சுய மேலாண்மையைக் கற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான, மிகச் சிறந்த சூழல்களை வழங்குவதற்கு பீல் வட்டாரக் கல்விச் சபையில் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இதனைச் செய்வதற்கு மாணவர்களினதும் அவர்களின் குடும்பத்தவர்களினதும் தேவைகளை நாங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இப்பணியில் எங்களுக்கு உதவி செய்வதற்காக எங்களுடைய முதலாவது *மாணவர் கணக்கெடுப்பை (Student Census)* நாங்கள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கிறோம் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

நவம்பர் மாதத்தில், பாலர் வகுப்பு (Kindergarten) முதல் மூன்றாம் வகுப்பு வரையான மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலருக்கு அவர்களுடைய பிள்ளை(கள்) சார்பாகப் பூர்த்திசெய்வதற்கு *மாணவர் கணக்கெடுப்புக் (Student Census)* கிடைக்கும். அவர்களின் பிள்ளையின் தேர்ச்சித் தாள் இருக்கும் அதே கடித உறையினுள் இந்தக் கேள்விக்கொத்தும் அனேகமான குடும்பத்தவர்களுக்குக் கிடைக்கும். நவம்பர் மாத நடுப்பகுதிக்குள் பிரதி ஒன்று உங்களுக்குக் கிடைக்காவிட்டால், தயவுசெய்து உங்களுடைய பிள்ளையின் ஆசிரியருடன் கதையுங்கள்.

இந்தக் கேள்விக்கொத்தைப் பூர்த்திசெய்வதற்குக் கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் எடுக்கும். பாலர் வகுப்பு (Kindergarten) முதல் மூன்றாம் வகுப்பு வரை உங்களுக்குப் பல பிள்ளைகள் இருந்தால், ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனிக் கேள்விக்கொத்தைப் பூரணப்படுத்தும்படி நீங்கள் கேட்கப்படுவீர்கள். இந்தக் கணக்கெடுப்பின் மொழிபெயர்க்கப்பட்ட வடிவங்களை உங்களுடைய பிள்ளையின் அல்லது பீல் பாடசாலைச் சபையின் வலைத்தளத்திலும்: www.peelschools.org/studentcensus பெற்றுக்கொள்ளலாம்.

இந்தக் கணக்கெடுப்பிலிருந்து (census) அறிந்துகொள்ளப்படுபவை சபைக்கும் எங்களுடைய பாடசாலைகளுக்கும் பின்வருவனவற்றில் உதவிசெய்யும்:

- மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகங்களைச் சிறப்பாக அறிந்துகொள்ளல்;
- மாணவர் வெற்றி, உள்ளடக்கல் மற்றும் நல்வாழ்க்கைக்கான தடைகளை இனம்காணல் மற்றும் அகற்றல்

- வினைத்திறனான திட்டங்களை உருவாக்கல் மற்றும் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இடங்களுக்கு ஆதாரவளங்களை மீள ஒதுக்கிடல்

இந்த *மாணவர் கணக்கெடுப்பு (Student Census)* அந்தரங்கமானது, ஆனால் அநாமதேயமானதல்ல. சேகரிக்கப்பட்ட பதில்கள் யாவும் பாதுகாப்பான, அந்தரங்கமான தரவுத்தளத்தில் சேமிக்கப்படும் அத்துடன் பீல் மாணவர்கள் இடையேயான மனப்போக்குகளை இனம்காணவும், சுருக்கவும் அங்கீகாரமளிக்கப்பட்ட ஆய்வுப் பணியாளர்களால் மட்டுமே அதை அணுக முடியும். பெற்றோருக்கான தனிப்பட்ட கேள்விக்கொத்துக்கள் ஆய்வு செய்யப்பட மாட்டாது. மாணவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதில் உயர்மட்ட அந்தரங்கம் மற்றும் இரகசியத்தன்மையைப் பேணவும், மாநகராட்சித் தகவல் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான தனியுரிமைச் சட்டத்தில் (MFIPPA) குறிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்தையும் பின்பற்றவும் பீல் சபை உறுதிபூண்டுள்ளது. கல்விக்கான சட்ட அங்கீகாரத்தின் (Education Act (R.S.O. 1990, c. E. 2, சேர்க்கை) கீழ் கல்வி மற்றும் ஆய்வு நோக்கங்களுக்கு மட்டுமான தகவல்கள் *மாணவர் கணக்கெடுப்பு (Student Census)* ஊடாகச் சேகரிக்கப்படுகின்றன.

*மாணவர் கணக்கெடுப்பில் (Student Census)* பங்குகொள்வது தன்னார்வத்துக்குரியது. இருந்தாலும், பூர்த்திசெய்யும் அளவு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு பாடசாலை மேம்பாடு மற்றும் திட்டமிடலுக்கான தகவல்கள் பயன்மிக்கவையாகவும் நம்பத்தகுந்தவையாகவும் இருக்கும் என்பதைக் கவனிப்பது முக்கியமாகும்.

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், இந்தக் கடிதத்தின் பின்பக்கத்தில் இருக்கும் தரவுத் தாளைத் தயவுசெய்து பரிசீலியுங்கள். www.peelschools.org/studentcensus என்ற வலைத்தளைத்தையும் நீங்கள் பார்வையிடலாம் அல்லது பீல் சபையின் ஆய்வு மற்றும் பொறுப்புடமை திணைக்களத்தை 905-890-1010 ext. 3523 ஊடாக அல்லது studentcensus@peelsb.com ஊடாகத் தொடர்புகொள்ளலாம்.

ஒவ்வொரு மாணவரிலும் வெற்றி, நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பை நாங்கள் ஊக்குவிக்கும் அதேவேளையில் எப்போதும்போல, உங்களுடைய தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி செலுத்துகிறோம்.



Peter Joshua

Director of Education (கல்வி அதிகாரி)

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

**பீல் வட்டாரக் கல்விச் சபையின் *மாணவர் கணக்கெடுப்பின் (Student Census)* நோக்கம் யாது?**

இந்தக் கணக்கெடுப்பிலிருந்து (census) அறிந்துகொள்ளப்படுபவை சபைக்கும் எங்களுடைய பாடசாலைகளுக்கும் பின்வருவனவற்றில் உதவிசெய்யும்:

- மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகங்களைச் சிறப்பாக அறிந்துகொள்ளல்;
- மாணவர் வெற்றி, உள்ளடக்கல் மற்றும் நல்வாழ்க்கைக்கான தடைகளை இனம்காணல் மற்றும் அகற்றல்
- வினைத்திறனான திட்டங்கள் உருவாக்கல் மற்றும் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இடங்களுக்கு ஆதாரவளங்களை மீள ஒதுக்கிடல்

***மாணவர் கணக்கெடுப்பில் (Student Census)* எவ்வகையான கேள்விகள் உள்ளடக்கப்பட்டுள்ளன?**

மாணவரின் அடையாளம், குடும்பச் சிறப்பியல்புகள், பாடசாலை அனுபவம் மற்றும் மாணவர் நல்வாழ்வு தொடர்பாக, கிட்டத்தட்ட 30 பல்தேர்வு வினாக்களை இந்த *மாணவர் கணக்கெடுப்பு (Student Census)* கொண்டுள்ளது.

**இந்தக் கணக்கெடுப்பில் இருக்கும் அனைத்துக் கேள்விகளுக்கும் நான் பதிலளிக்க வேண்டுமா?**

*மாணவர் கணக்கெடுப்பில் (Student Census)* பங்குகொள்வது தன்னார்வத்துக்குரியது. பதில் வழங்குவதற்கு நீங்கள் விரும்பாத கேள்விகளைத் தவிர்ப்பதை நீங்கள் தெரிவுசெய்யலாம் அல்லது முற்றாகப் பங்குகொள்ளாமலிருப்பதைத் தெரிவுசெய்யலாம். இருந்தாலும், பூர்த்திசெய்யும் அளவு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு பாடசாலை மேம்பாடு மற்றும் திட்டமிடலுக்கான தகவல்கள் பயன்மிக்கவையாகவும் நம்பத்தகுந்தவையாகவும் இருக்கும் என்பதைக் கவனிப்பது முக்கியமாகும்.

**பாலர் வகுப்பு (Kindergarten) முதல் மூன்றாம் வகுப்பு வரை எனக்குப் பல பிள்ளைகள் இருக்கிறார்கள், ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனிக் கணக்கெடுப்பை நான் பூர்த்திசெய்ய வேண்டுமா?**

ஆம். ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனிக் கணக்கெடுப்பை நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டும். ஒவ்வொரு மாணவரினதும் அடையாள இலக்கத்துடன் (ID)

தொடர்புபட்டிருக்கும் ஒரு தனிப்பட்ட, விசேடமான குறியீடு ஒவ்வொரு கேள்விக்கொத்துக்கும் உள்ளது.

### இந்தக் கேள்விக்கொத்தை நான் பூர்த்திசெய்யும்போது எனது பிள்ளை என்னுடன் இருக்கவேண்டுமா?

அனைத்து மாணவர்களினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது இந்த *மாணவர் கணக்கெடுப்பின் (Student Census)* நோக்கமாகும். உங்களுடைய பிள்ளையின் எண்ணங்கள் மற்றும் அனுபவங்களைப் பதிவுசெய்வதற்காக இந்தக் கணக்கெடுப்பை அவருடன் சேர்ந்து பூர்த்திசெய்யும்படி நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

### என்னுடைய பதில்கள் எப்படி இரகசியமாகப் பேணப்படுமா?

உங்களுடைய பிள்ளையின் பெயருடனான உள்ளீடு ஒன்று உங்களுடைய கணக்கெடுப்புக் கேள்விக்கொத்தில் உள்ளடக்கப்படும்–உங்களுடைய பிள்ளையின் பெயர் அல்லது வேறு ஏதாவது அடையாளத் தகவல்கள் இந்தப் பக்கத்தில் மட்டுமே இருக்கும். உங்களுடைய கணக்கெடுப்புடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், பூர்த்திசெய்த உங்களுடைய கணக்கெடுப்பை தபால் உறையினுள் வைத்து ஒட்ட முன்னர் அந்த உள்ளீட்டை அகற்றும்படி உங்களைக் கேட்கும். பதில்களை ஸ்கான் பண்ணி ஆராய்வதற்காக பீல் சபையால் ஒப்பந்தத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட பாதுகாப்பான வெளி நிறுவனம் ஒன்றுக்கு இந்த ஒட்டப்பட்ட தபால் உறைகளை ஒவ்வொரு பாடசாலையும் அனுப்பும். ஆய்வு நோக்கங்களுக்கான பகுப்பாய்வுக்காக, இந்த இரகசியமான தரவுத்தளத்தை ஆய்வுத் திணைக்களம் மட்டுமே அணுகும். இந்தப் படிமுறைகள், மாநகராட்சித் தகவல் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான தனியுரிமைச் சட்டத்துடன் (MFIPPA) இணங்குகின்றன.

### இரகசியமான கணக்கெடுப்புக்கும் அநாமதேயக் கணக்கெடுப்புக்கும் என்ன வித்தியாசம்?

இந்த *மாணவர் கணக்கெடுப்பு (Student Census)* அந்தரங்கமானது, ஆனால் அநாமதேயமானதல்ல. ஒவ்வொரு மாணவரினதும் அடையாள இலக்கத்துடன் (ID) தொடர்புபட்டிருக்கும் தனிப்பட்ட, விசேடமான குறியீடு ஒன்று ஒவ்வொரு கேள்விக்கொத்துக்கும் உள்ளது. சபையின் ஆய்வுத் திணைக்களம் பதில்களைப் பகுப்பாய்வு செய்யும்போது, முன்பே சேகரிக்கப்பட்ட ஏனைய தரவுகளையும் (உ+ம். முகவரி, வீட்டில் பேசப்படும் மொழிகள், வகுப்பு முதலியவை) பயன்படுத்துவதற்குத் தனிப்பட்ட குறியீடு உதவுகிறது, பீல் மாணவர்களை முழுமையாக விளங்கிக்கொள்ளல் அதனால் விளைவாகின்றது.

பெற்றோர்/பாதுகாவலர் வழங்கிய தகவல்கள் இரகசியமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக–மாணவரின் பெயர் அல்லது அடையாள இலக்கம் போன்ற–தனிப்பட்ட அடையாளம் அந்தக்கேள்விக்கொத்தில் இருக்கமாட்டாது.

**கணக்கெடுப்புத் தரவுகள் எவ்வகையில் பயன்படுத்தப்படும்?**

பதில்கள் பதியப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதும், திட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் பற்றிய சபையினதும் பாடசாலையினதும் தீர்மானங்களுக்கு உதவிசெய்வதற்காக, பீல் சபையின் ஆய்வுத் திணைக்களம் தொடர்ச்சியான அறிக்கைகளை உருவாக்கும். சமூகத்தவர்களினது தேவைகளை, சமூகப் பங்காளர்களும் அரசாங்க முகவர்களும் சிறப்பாகப் பூர்த்திசெய்வதற்காக, அவர்களுடைய சேவைகளை மேம்படுத்த உதவும் முகமாக அவர்களுடனும் சுருக்கிய தரவுகள் பகிரப்படலாம். தரவு அறிக்கைகள் அல்லது பகுப்பாய்வுகள் ஒருபோதும் மாணவர் ஒருவரை தனித்துக்காட்டாது. கணக்கெடுப்பைப் பூர்த்திசெய்த மாணவர்/பெற்றோர் எவரினதும் தனிப்பட்ட தகவல்களை சட்டப்படி பீல் சபை வெளிப்படுத்த முடியாது.